# இளையோர் மாதிரி தேர்தல் அறிக்கை
# சட்டமன்ற தேர்தல் - 2021

## Youth Model Election Manifesto for Legislative Assembly Election- 2021



**Trust for Youth and Child Leadership (TYCL)**
இளையோர் மற்றும் குழந்தைகள்
தலைமைத்துவ மையம்

# முகவுரை / PREFACE

புதுவை இளையோர் மாதிரித் தேர்தல் அறிக்கை – 2021 என்பது ஒரு முழுமையான இளையோர் முன்முயற்சியாகும். வருகின்ற சட்டமன்ற தேர்தல் மூலம் அமையவிருக்கும் புதிய அரசின் மீது இளையோர் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளையும் அவர்கள் கொண்டுள்ள தேவைகளையும் புரிந்து கொள்வதே இதன் நோக்கமாகும். இது எங்களின் மூன்றாவது பதிப்பாகும்; கடந்த சட்டமன்ற தேர்தல்– 2016 இல் முதலாம் பதிப்பும், மக்களவை தேர்தல் – 2019 இல் இரண்டாம் பதிப்பும் வெளியானது. இளையோர் மற்றும் குழந்தைகள் தலைமைத்துவ மையத்தின் முயற்சியில் இளையோர் மற்றும் அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள அடிப்படையான தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பதிவு செய்துள்ளோம்.

இளையோர்பங்கேற்புடனானவளர்ச்சிமற்றும்தேவைக்கும்,அரசின் திட்டங்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை நீக்கி வளர்ச்சியை ஒருமுகப்படுத்தும் நோக்கில் இளையோர் மற்றும் குழந்தைகள் தலைமைத்துவ மையம் இந்த "இளையோர் மாதிரி தேர்தல் அறிக்கையை" முன்னெடுக்கிறது. இம்முயற்சியின் நோக்கம் எந்த ஒரு அரசாங்கத்தையும், அரசியல் கட்சியையும் குறை கூறவோ விமர்சிக்கவோ அன்று. இது முழுமையாக புதுச்சேரி இளையோர்களின் எதிர்கால சவால்களை தடுப்பதற்கு அவர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் அனைத்து முன்னணி கட்சிகளிடமும், எதிர்கால அரசாங்கத்திடமும் கொண்டு சேர்ப்பதே ஆகும்.

புதுவையின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ளூர் இளையோர்கள் மற்றும் மாணவத் தன்னார்வலர்களைக் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்ட மாதிரித் தேர்தல் அறிக்கையாக அரசியல் கட்சிகள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களின் புரிதலுக்காகவும் பார்வைக்காகவும் வெளியிடப்படுகிறது. இந்த செயல்முறை இளையோர்களுக்கு அரசாங்கத்தின் சவால்களை புரிந்துகொள்ளவும் மற்றும் நிர்வாக செயல்பாட்டில் இளையோர்கள் பங்கேற்பதன் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

இந்த முயற்சி அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அமையவிருக்கும் புதிய அரசாங்கத்திற்கும் நமது சமூகம் மற்றும் அரசாங்கத்தைப் பற்றிய இளையோர்களின் கருத்தை பெறுவதற்கும் மேலும் புதுச்சேரியில் 'இளையோர்கள் பங்குபெறும் ஆட்சிமுறையை' நிறுவுவதற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

உள்ளூர் செயல்பாடு! உலக மாற்றம்!!

Puducherry Youth Model Election Manifesto- 2021 is purely Puducherry youth's initiative to understand the needs and expectations of young people on the future Government to be formed by the Puducherry State Assembly Election - 2021. This is the Third edition and the previous two were published for State Assembly Election- 2016 and Lok Sabha Election- 2019. We the young people from TYCL have taken an effort to identify the real needs and precise expectations of youth and their communities.

The needs of young people and the services of the Government and political parties has a huge gap in terms of participatory development. In order to address that development gap, TYCL has initiated a "YOUTH MODEL ELECTION MANIFESTO" from youth's lens towards "Youth Participative Governance" in Puducherry. This process is not to blame or criticize the parties and Government. It's purely to understand and communicate the needs and expectations of the young people to all the leading political parties and future Government to prevent future challenges of young people of the UT of Puducherry.

This process has been done in all the constituencies of Puducherry with the support of local youth and student volunteers. The collected inputs are compiled into a report and presented here as a model manifesto for the wider understanding and dissemination for the political parties, media and public. This process helped the young people to understand the constraints and challenges of the Government as well as the importance of the young people's participation in the governance process.

We strongly believe that this manifesto will be useful to all the political parties and upcoming new government to have a better understanding of the young people and their perspective towards our society and government and to establish a "Youth Participative Governance" in Puducherry.

Local Action! Global Change!!.

# உள்ளடக்கம் / CONTENT


ஆட்சி முறை / GOVERNANCE ........ 1

கல்வி / EDUCATION ........ 3

குழந்தை வளர்ச்சி / CHILD DEVELOPMENT ........ 6

இளையோர் முன்னேற்றம் / YOUTH DEVELOPMENT ........ 8

மகளிர் மேம்பாடு / WOMEN DEVELOPMENT ........ 10

முதியோர் மேம்பாடு / SENIOR CITIZEN PROTECTION ........ 12

மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றம் / PERSON WITH DISABILITY DEVELOPMENT ........ 14

மூன்றாம் பாலினத்தோர் பாதுகாப்பு / THIRD GENDER PROTECTION ........ 16

தொழில் வளர்ச்சி / INDUSTRIAL DEVELOPMENT ........ 18

உட்கட்டுமான வளர்ச்சி / INFRASTRUCTURE DEVELOPMENT ........ 20

சுகாதாரம் / HEALTH ........ 22

நீர் / WATER ........ 24

உழவர் மற்றும் மீன்பிடி தொழில் வளர்ச்சி / FARMER AND FISHERIES DEVELOPMENT ........ 26




# ஆட்சி முறை / GOVERNANCE

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

(குறள் 382)

An army, people, wealth, a minister, friends, fort: six things- Who owns them all, a lion lives amid the kings.

( Kural 382 )

நாம் சுதந்திரமாக செயல்பட புதுவைக்குத் தனிமாநில அந்தஸ்துப் பெற்றுத் தரப்படும்.

100 சதவீதம் வெளிப்படையான மற்றும் ஊழலற்ற அரசு நிர்வாகத்தை கட்டமைக்கப்படும்.

உள்ளாட்சி தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்படும்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் துறையிடமிருந்து புதுச்சேரியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான போதிய நிதிகள் பெற்று தரப்படும்.

புதுவை மக்களின் குரல்கள் அனைத்து பாராளுமன்ற அமர்வுகளிலும் எழுப்பப்படும்.

புதுவையின் அனைத்து குடிமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் குற்றங்களை குறைப்பதற்கான சிறப்பு குழு அமைக்கப்படும்.

புதுவையின் அனைத்து குடிமக்களும் அரசு அமைப்புகளை எளிமையாக அணுகவும் மற்றும் அரசு திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதும் உறுதிசெய்யப்படும்.

புதுவையின் அனைத்து பட்டியலின பழங்குடி மக்களுக்கும் ST அங்கீகாரம் பெற்றுத்தருவதற்கு சிறப்பு குழு அமைக்கப்படும்.

பணியாளர்களின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த இணையதள குறை நிவர்த்தி அமைப்பு அறிமுகப்படுத்தப்படும்.

We will get statehood for Puducherry to operate independently.

We will form a corruption free Government with 100% transparency in the administration.

A fair Local body election will be conducted.

Sufficient fund from various ministries of Central Government will be mobilized for the holistic development of Puducherry.

Puducherry people’s voice will be raised in the house of every parliamentary sessions.

We will form special committee to reduce crime in Puducherry to ensure safety for all residents of Puducherry.

We will ensure easy access to all the Government Bodies and effective Implementation of Government Schemes to all the residents of Puducherry.

A special committee will be formed to get ST status for all the scheduled tribes of Puducherry.

We will introduce Online Grievance Redressal System(OGRS) for better accountability of the stakeholders.



# கல்வி / EDUCATION

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

(குறள் 396)

நாங்கள் இளநிலைவரை இலவச, தரமான, உள்ளடக்கிய கல்வியை அனைவருக்கும் வழங்குவோம்.

தனியார் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் படிப்புகளுக்கான கட்டணங்கள் நெறிபடுத்தப்படும்.

மருத்துவ படிப்புகளிலும் புதுவை பல்கலைகழகத்திலும் உள்ளூர் மாணவர்களுக்காண இடஒதுக்கீட்டை அதிகமாக கொண்டு வருவோம்.

நாங்கள் பல்வேறு துறைகளை சார்ந்த பலதரப்பட்ட படிப்புகளை உயர்கல்வி மற்றும் முதுகலை பட்டப்படிப்பு குறிப்பாக கலை மற்றும் அறிவியல் துறையில் இணைப்போம். மேலும் பல்துறைகளுக்கான ஐந்து அரசு கல்லூரிகளை நிறுவுவோம்.

அனைத்து பள்ளிகளிலும் தகுதிவாய்ந்த பள்ளி ஆலோசகர்களை நியமித்து வளரிளம் குழந்தைகளுக்கு கலாச்சார உணர்வுடன் பாலியல் கல்வி வழங்கப்படும்.

அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் உள்ளடக்கிய மின்னணு நூலகம் உருவாக்கப்படும்.

சுற்றுசூழல் கல்வியை ( குறைதல்/ மீள்பயன்பாடு/ மறுசுழற்சி/மேல்சுழற்சி) அணைத்து பள்ளிகளிலும் கட்டாயமாக்குவோம்.

அனைத்து கல்வி நிறுவனங்களிலும் திறன் சார்ந்த பயிற்சி மையங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

அனைத்து பள்ளிகளிலும் கட்டாய தற்காப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.

புதுவையின் அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன்களிலும் அரசு சிறப்பு பள்ளிகள் துவங்கப்படும்.

கட்டாய வெளிவட்ட விழிப்புணர்வு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மாணவர்களின் தனிமனித சமூகப் பொறுப்பு அதிகரிக்க ஊக்குவிக்கப்படும்.

தொழில் வழிகாட்டுதல் திட்டம் அணைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் கட்டாயமாக்கப்படும்.

As deep you dig the sand spring ows
As deep you learn the knowledge grows

( Kural 396 )

We will ensure free, inclusive and quality education to all the students up to under graduation.

We will regularize fees structure of the courses provided by Private Educational Institutions.

We will bring more reservation for local students in Medical Institutions and Pondicherry University.

We will include various courses of different stream in Higher Education and Post Graduation especially in Arts and Science. Also will establish five more Government colleges in various stream.

Certified School counsellors will be made mandatory to all the schools and sex education with cultural sensitivity will be started for adolescent.

We will create inclusive digital library which is accessible to every students.

Environmental education (Reduce / Reuse / Recycle / Upcycling) will be made compulsory in all the Schools.

We will introduce skill based training hub in all educational institutions.

Self-defence training program will be made mandatory in all the Schools.

We will start Government special school in all municipalities and communes of Puducherry.

Mandatory Outreach Programmes for every educational Institution (inside and outside the Institution) to sensitize the students about an individual's Social Responsibility.

Career guidance programmes will be made mandatory in every school and colleges.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.
(குறள் 396)

As deep you dig the sand spring ows
As deep you learn the knowledge grows
( Kural 396 )

அரசு பள்ளிகள் மற்றும் அலுவலகங்களின் கட்டிடங்கள் புதுப்பிக்கப்படும்.

We will renovate all the Government Schools and Office.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் கட்டணத்தை டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகதிற்கு இணையாக குறைக்கப்படும்.

Pondicherry Central University fees will be reduced has equivalent to Jawaharlal Nehru University Delhi.

நீட் தேர்வு புதுவையிலிருந்து நீக்கப்படும்.

NEET exam will be removed from Puducherry.

அனைத்து ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது பயிற்சியளிப்பதை கட்டாயப்படுத்துவோம். மேலும் கண்காணிப்புக் குழுவை அமைப்போம்.

We will mandate the periodical training for all the teachers and will form a monitory board.

Trust for Youth and Child Leadership
TYCL
Local Action! Global Change!



# குழந்தை வளர்ச்சி / CHILD DEVELOPMENT

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

(குறள் 68)

2030 ஆம் ஆண்டில் குழந்தைத் தீங்கிழைப்பு முற்றிலும் ஒழிக்கப்பட்டு, குழந்தைநேயப் புதுவை உருவாக்கப்படும்.

நாங்கள் குழந்தைநேயச் சுற்றுலாவை அறிமுகப்படுத்தி, அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் குழந்தைகளைத் தடுக்க சுற்றுலாப் பயணிகளை முறையாகக் கண்காணிப்போம்.

ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஆதரவோடு கிராம அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

குழந்தை குழுக்கள் அமைக்கப்பட்டு, குழந்தைகளின் பங்கேற்பு அணைத்துத் தளங்களிலும் உறுதி செய்யப்படும்.

கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான நுண்காப்பீடு 3–18வயதுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவசமாக அளிக்கப்படும்.

சட்டத்திற்கு முரணான மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு குடும்பச்சூழல் சார்ந்த மாற்று கண்காணிப்பு இல்லங்கள் அமைக்கப்படும். பெண்குழந்தைகளுகான சிறப்புக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

மாற்று திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்,தெருவோர மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

அனைத்துப் பள்ளிகளிலும் அவசரகாலத் தொலைப்பேசி அமைக்கப்பட்டுக் குழந்தை உதவி எண் மற்றும் தொலைதொடர்பு ஆலோசனை வழங்கப்படும்.

குழந்தைத் தலைவர் மற்றும் குழந்தைநேய விருதுகள் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையின் மூலம் அமைக்கப்பட்டு சீரிய தொண்டாற்றுபவர்களுக்கு வழங்கப்படும்.

புதுச்சேரியின் அனைத்து மாணவர்களுக்கும் டிஜிட்டல் கற்றல் தளத்திற்கான அணுகலை உறுதி செய்வோம்

With joy the hearts of parents swell
To see their children themselves excel

( Kural 68 )

Zero child abuse in Puducherry by 2030 and Puducherry will be announced as “Child Friendly City”.

We will adopt child friendly tourism initiatives, proper tracking and monitoring of tourist to prevent children from all forms of exploitations.

Village level child protection committee will be introduced with support of ICPC.

Children’s clubs will be formed and their participation will be ensured in all the matters relating to them.

Free Micro insurance for health and education will be introduced for children in the age group of 3 - 18 years old.

Alternate family based observation homes will be set up for the children in need of care / protection and children in conflict with law and separate infrastructure for girls.

Alternate interest based skill training will be given to all the street and destitute children.

Every school will have emergency telephone booth for CHILD HELPLINE and mobile counselling.

Child Leader and Child friendly awards will be initiated and all the key actors will be recognised through Women and Child Development Department.

We will ensure the access to digital learning platform to all the students of Puducherry



# இளையோர் முன்னேற்றம் / YOUTH DEVELOPMENT

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

(குறள் 698)

As young and kinsman do not slight;
Look with awe king's light and might

( Kural 698 )

புதுவையில் இளையோர் மேம்பாட்டுக்கான தனி துறை அறிமுகப்படுத்தப்படும்.

அதிகமான திறன்மேம்பாட்டு பயிற்சிகளும் பல்துறை சார்ந்த வேலைவாய்ப்பு முகாம்களும் துவங்கப்படும்.

அரசு தனியார் கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் பல துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி 100 சதவீத வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்.

ஒடுக்கப்பட்ட மற்றும் குறைவான வருமானம் பெரும் குடும்பங்களை சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்பு திட்டங்களிலும் திறன் மேம்பாடு பயிற்சிகளிலும் முன்னுரிமை அளிக்கப்படும்.

உள்ளூர் விளையாட்டு வீரர்களுக்கு உலக அளவிலான வெளிப்பாடு கிடைக்க சர்வதேச விளையாட்டு போட்டி சந்திப்புகள் புதுவையில் நிகழ்த்தப்படும்.

தேசிய மற்றும் சர்வதேச இளையோர் பரிமாற்றங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படுவதன் மூலம் உலகளாவிய புரிந்துணர்வு ஏற்படுத்தப்படும்.

இளையோர் உதவிஎண் அறிமுகம் செய்யப்பட்டு ,இளையோர்களின் சிறந்த மனநலத்தை உறுதிசெய்வதன்மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் இளைஞர்கள் தற்கொலை இல்லா மாநிலமாக புதுவை மாற்றம் பெறக்கூடும்.

கிராமந்தோறும் கணினிமயமாக்கப்பட்ட நூலகத்துடன் கூடிய இளையோர் வளமையம் உருவாக்கப்பட்டு இளையோர்களை சமூகத்தின் அறிவுசார் வளங்களாக மாற்றியமைப்போம்.

ஒவ்வொரு தொகுதியிலும் பி.எம்.கே.வி.ஒய் திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு திறம்பட செயல்படுத்தப்படும்.

அரசு வேலைக்கான ஆட்சேர்ப்பு அவ்வப்போது செய்யப்படும்.

போட்டித் தேர்வுக்குத் தயாராகும் இளைஞர்களுக்கான தரமான ஆசிரியர்களைக் கொண்ட பயிற்சி நிறுவனங்களை நிறுவுவோம்.

உள்ளூர் பஞ்சாயத்து தேர்தலில் இளைஞர்களுக்கு 50% இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

We will introduce separate department for youth development in Puducherry.

More skill development training programs and job fair for different streams will be initiated.

We will ensure 100% employment by creating more job opportunities in various disciplines through Public Private Partnership (PPP).

Youth from Under privileged sections and low income families will have a priority in employable skill development and employment programs.

International sports meet will be organised in Puducherry to provide global exposure to local sports persons.

National and International youth exchange will be organised in a periodical manner to get global exposure.

Youth Helpline will be launched to address youth issues to set a better mental well-being and Zero youth suicide will be ensured in Puducherry by 2030.

Every village will have a computerised youth resource centre cum library with local facilitator to build young people as knowledge based resources of the communities.

Awareness and effective implementation on PMKVY scheme in every constituency.

Recruitments for Govt job will be done periodically.

We will establish Training institutes with quality teachers for youths preparing for competitive exam.

50% reservation will be given for youth in local body election.




# மகளிர் மேம்பாடு / WOMEN DEVELOPMENT

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

(குறள் 910)

Thinkers strong and broad of heart
By folly on fair sex do not dote.

( Kural 910 )

வீடு, நிறுவனம் மற்றும் பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பெண்கள் உதவி எண் புதுப்பிக்கப்பட்டு திறம்பட செயல்படுத்தப்படும்.

நாங்கள் பெண் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றுமின்றி, அணைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மகளிர் காவல் நிலையத்தை அமைத்துத்தருவோம்.

சட்டமன்றம் மற்றும் உள்ளூர் பஞ்சாயத்துகள் உட்பட அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

மகளிர் ஆணையம் மறுசீரமைப்புச் செய்யப்படும் மேலும் பெண்களுக்கான ஆலோசனை மையம் நிறுவப்படும்.

இணைய மற்றும் சமூக வலைத்தளம் மூலம் இழைக்கப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிநவீன ஊடுருவுத் தொழில் நுட்பம் மூலம் கண்காணித்துத் தடுக்கப்படும்.

பெண்களுக்கான சட்ட உதவியுடன் கூடிய கிடைக் காலத் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும்.

அனைத்து கல்வி நிறுவனங்களிலும் ஒரு முழுமையான தற்காப்பு பயிற்சி திட்டம் கட்டாயப்படுத்தப்படும்.

Women helpline will be revamped and implemented effectively to ensure the safety of women at home, institution and workplace.

We will increase women police personnel and will bring Women Police Station in all constituency.

50% reservation for women in all the sector including legislative assembly seat and local panchayats.

Women commission will be re-established and counselling centre will be established.

Online and cyber-crime against women and children will be monitored and prevented with hightech support.

Women short stay homes will be initiated with legal aid.

A holistic self-defence training program will be mandated in all educational institutions.


Trust for Youth and Child Leadership
TYCL
Local Action! Global Change!



# முதியோர் மேம்பாடு / SENIOR CITIZEN PROTECTION

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.
(குறள் 441)

Weigh their worth and friendship gain
Of men of virtue and mature brain.
( Kural 441 )

ஆரம்ப சுகாதார நிலையங்களை வலுப்படுத்தி மூத்த குடிமக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்து, இலவச நலக் காப்பீடு வழங்கப்படும்.

மூத்த குடிமக்களின் பாதுகாப்பிற்குத் தேவையான உபகரணங்களைச் சமூக நிறுவனங்கள் மூலம் அரசு வழங்கும்.

அனைத்து மருத்துவமனைகளிலும் முதியோருக்கான தனிவரிசை மற்றும் படுக்கைகள் ஒதுக்கப்படும் .

அந்த்யோதயா திட்டப்படி அனைத்து முதியோர்களுக்கும் உணவுக்கான உரிமை உறுதி செய்யப்படும். குறிப்பாக ஆதரவற்ற மற்றும் விளிம்புநிலை முதியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தலைமுறைகளுக்கிடையே உள்ள உறவு இடைவெளியை நீக்கும் வகையில் தரமான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மருத்துவ மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு முதியோர் உடல்நலம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு, வெற்றிகரமான முதுமையை யோகா அறிவியல் வழியான பொழுதுபோக்குத் திட்டங்கள் அமைக்கப்படும்.

Primary health care system will be strengthened to meet the health care needs of elderly persons and free health care insurance will be provided to all the elders of Puducherry.

We will provide assistance to societies for production and distribution of material on geriatric care.

Provision of separate queues and reservation of beds for elderly patients in hospitals.

Extended coverage under the Antyodaya Scheme with emphasis on provision of food at subsidised rates for the benefit of elder persons especially the destitute and marginalized sections.

We will undertake measures to enhance the quality of inter - generational relationships through periodical programs.

Training and orientation to medical and paramedical personnel in health care of the elderly. We will promote the concept of successful healthy ageing through YOGA and healthy and scientific recreation programs.



# மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றம் /

# PERSON WITH DISABILITY DEVELOPMENT

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

(குறள் 769)

Army shall win if it is free
From weakness, aversion, poverty.

( Kural 769 )

புதுவையிலுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி உரிமைகள் உறுதி செய்யப்படும்.

பொதுப் பயன்பாட்டுக் கட்டிடங்கள், போக்குவரத்து அமைப்புகள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வகையில் அமைக்கப்படும்.

வருமான உற்பத்தி மற்றும் தொழில்முனைதல் மூலம் மாற்றுத் திறனாளிகளின் அதிகபட்ச பொருளாதார சுதந்திரம் உறுதி செய்யப்படும்.

எல்லா மாவட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகள் தொழிற்பயிற்சிக் கல்வி நிறுவங்கள் பொது – தனியார் கூட்டு மூலம் அமைக்கப்படும்.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளைத் தத்தெடுப்போருக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும்.

மாற்று திறனாளிகள் உரிமை சட்டம் மாநில விதிகளுடன் செயல்படுத்தப்படும்.

மாற்று திறனாளிகளுக்கான இடஒதுக்கீட்டை அரசுத் துறை நிறுவனங்களில் முறையாகச் செயல்படுத்தி வறுமை ஒழிப்பு மற்றும் கல்வி மேம்படுத்தப்படும்.

மாற்று திறனாளிகளுக்கான உதவி தொழில்நுட்ப கருவிகள் இலவசமாக வழங்கப்படும்.

We will ensure and implement the right to education and vocational training for the person with disabilities.

We will ensure disabled friendly access to public utilities, public buildings, and transport.

We will provide maximum economic independence for the disabled by creating more income generation models and entrepreneurship program.

We facilitate establishment of an Institute of vocational training for the disabled in every district with public private partnership.

We will provide special incentive for the adoption of a disabled child.

Effective implementation of Rights of Persons with Disabilities Act with updated state rules.

We will effectively implement the reservations provided for persons with disabilities in public sector employment, poverty alleviation, programmes and education.

We will ensure free assistive technology equipments for people with disabilities.



# மூன்றாம் பாலினத்தோர் பாதுகாப்பு / THIRD GENDER PROTECTION

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(குறள் 972)

மூன்றாம் பாலினம்/ பாலின தேர்வாளர்களுக்கான கணக்கெடுப்பு நடத்தப்படும்.

அறுவை சிகிச்சை செய்துகொண்ட மூன்றாம் பாலினத்தவருக்கு மருத்துவ காப்பீட்டுடன் கூடிய வீடு வழங்கப்படும்.

மூன்றாம் பாலினம்/ பாலின தேர்வாளர்களுக்கான உதவி மற்றும் வளமையம் அமைக்கப்படும்.

மூன்றாம் பாலினம் குறித்த அறிவியல் சார்ந்த புரிதல் அனைத்து கல்வி நிறுவனப் பாடத் திட்டங்களிலும் கட்டாயமாக்கப்படும்.

மூன்றாம் பாலினத்தோருக்கான சிறப்புத் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியுடன் முதலீட்டு விதைத்தொகை வழங்கப்படும்.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மறுபாலின அறுவை சிகிச்சை மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்

All beings are the same in birth
But work decides their varied worth.

( Kural 972 )

Integrated survey of LGBTQ+ population in Puducherry.

Permanent houses to all the post-surgery Third Genders with health insurance will be offered.

LGBTQ+ help desk cum Resource centre will be established in Puducherry.

The scientific understanding about transgender will be made compulsory in the syllabus of all Government and Private schools.

Special entrepreneurship training, seed funding will be given to all the transgenders.

Free sex reassignment surgery and medicines for the same in Govt. Hospitals will be done.




# தொழில் வளர்ச்சி / INDUSTRIAL DEVELOPMENT

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.
(குறள் 120)

A trader's trade prospers fairly
When his dealings are neighbourly.
( Kural 120 )

தொழில் முனைவோருக்கும் உள்ளூர் தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பு நிதி ஒதுக்கப்படும்.

எல்லா நகராட்சி மற்றும் கம்யூன்களிலும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தைத் திறமிகச் செயல்படுத்தி, அமைப்புசாராத் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்.

அரசின் கீழ் இயக்கப்பட்டு வந்த ஆலைகளை நாங்கள் மீண்டும் இயக்கச்செய்வோம்.

நாங்கள் புதிதாக தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்றை உருவாக்கி வேலை வாய்ப்பை அதிகரிப்போம்.

உலகளாவிய நியாய வர்த்தக முதலீட்டாளர்கள் மாநாடு ஆண்டுதோறும் புதுவையில் நடைபெறும்.

பொறுப்புடைய மற்றும் மரபார்ந்த கிராமப்புற சுற்றுலா புதுவையில் மேம்படுத்தப்படும்.

சுற்றுசூழலுக்குத் தீங்கிழைக்கும் தொழிற்சாலைகளை மறுசீரமைக்க சட்டவிதிமுறைகள் உருவாக்கப்படும்.

குழந்தை தொழிலாளர்கள் முறை முழுமையாக களையப்படும்.

2025ஆம் ஆண்டில் புதுவை மாநில நியாய வர்த்தக நகரமாக அறிவிக்கப்படும்.

Special budget allocation for Local Business and Entrepreneurship development.

Every commune and municipality will have an entrepreneurship development centre to promote early stage of business.

Effective implementation of Minimum Wage act with social security measures to all unorganized labour.

We will restart the mills that were operating under the Government.

We will build a IT park outside the city which will create more job opportunities.

Annual Global Fair Trade Investors meet will be organised in Puducherry.

Responsible and rural heritage tourism will be promoted in Puducherry.

We will establish an intensive amendment against industries which are hazards to the environment.

Zero tolerance for Child Labours in any kind of industries.

Puducherry will be announced as "Fair Trade City" by 2025.



# உட்கட்டுமான வளர்ச்சி / INFRASTRUCTURE DEVELOPMENT

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.
(குறள் 569)

The king who builds not fort betimes
Fears his foes in wars and dies.
( Kural 569 )

புதுச்சேரியின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சாலைகள் மற்றும் தெரு விளக்குகளின் தரத்தை முறையான கையாளுதலுடன் உறுதி செய்வோம்.

We will ensure the quality of roads and street lights across all regions of Puducherry with proper manitenance.

நாங்கள் புதுவையிலுள்ள அனைத்து பொதுக்கழிப்பிடங்களை சீரமைத்து தருவதுடன் புதிதாக பல பொதுஇடங்களில் பொதுக்கழிப்பிடம் அமைத்துத்தருவோம்.
இக்கழிப்பிடங்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அமைத்துத்தரப்படும்.மேலும் இதன் சுகாதாரம் தொடர் பராமரிப்பால் உறுதி செய்யப்படும்.

We will renovate and build more public toilet across Puducherry. It will be accessible to all and will ensure hygiene by proper maintenance.

பள்ளி கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள மதுபானக்கடைகள் அகற்றப்படும்.

Wine shops near Schools & Colleges will be removed.

புதுவையில் போக்குவரத்து நெரிசல் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்தும் வசதி செய்து தரப்படும்.

We will build a multi-store parking facilities in all the high traffic areas of Puducherry.

எளிதில் பயன்படுத்தக்கூடிய கணினிமயமாக்கப்பட்ட அரசு நூலகங்கள் அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் அமைத்துத்தரப்படும். மேலும் தற்போதுள்ள நூலகங்களின் செயல்பாட்டை உறுதி செய்வோம்.

Easily accessible computerised Government Library will be built in rural areas and we will ensure the functioning of the existing libraries.

புதுவையிலுள்ள அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன்களில் விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா அமைத்துத்தர உறுதி செய்கிறோம்.

We will ensure playgrounds and public parks in every Municipalities and Communes of Puducherry.

சூரியசக்தி மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஊக்கப்படுத்தி, அனைத்து வீடுகளுக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்படும்.

We will promote solar energy and rain water harvesting to be made compulsory in all the households.

புதுவையிலுள்ள பல்லவேறு ஆபத்து நிறைந்த பகுதிகளில் தீவிர கண்காணிப்பு கேமரா நிறுவப்பட்டு பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்.

Installing more active CCTV camera in high risk area to ensure safety.

நங்கள் புதுவையின் துறைமுகத்தை மீட்டுருவாக்குவோம் மற்றும் இதன் மூலம் வரும் வேலைவாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

We will reconstruct Puducherry harbour and will give job preference to local people.

அனைத்து தொகுதிகளுக்கும் பொது போக்குவரத்து வசதியை உறுதி செய்வோம், மேலும் பேருந்து சேவையின் நேரம் அதிகப்படுத்தப்படும்.

We will ensure public transport facility for all the constituencies and will increase the frequency of the bus service.

பொது போக்குவரத்தின் அனைத்து வாகனங்களிலும் வேகக் கட்டுப்பாட்டு கருவியை கட்டாயப்படுத்துவோம்.

We will mandate the speed control device in all the vehicles of public transportation.

புதுச்சேரியின் ஒவ்வொரு தெருக்களிலும் குப்பைகளை பிரித்து சேகரிக்கும் தொட்டிகளை உறுதி செய்வோம், மேலும் மீள்சுழற்சி நடைமுறையை ஊக்குவிப்போம்.

We will ensure waste segregation bins in every streets of Puducherry and will promote upcycling practice.



# சுகாதாரம் / HEALTH

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து.

(குறள் 738)

Rich yield, delight, defence and wealth
Are jewels of lands with blooming health.

( Kural 738 )

நாங்கள் கிராமப்புற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மருத்துவ ஆலோசகர் மற்றும் உளவியல் நிபுணர்களின் இருப்பை அதிகரித்து மக்களை மனநல பிரச்சனைகளிலிருந்து பேணிக் காப்போம்.

பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச மருத்தவ காப்பிட்டுத்திட்டத்தை உறுதி செய்வோம்.

நாங்கள் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மனநல ஆலோசகர்களை பணியேற்றி மாணவர்களின் உடல் மன ஆரோக்கியத்தை உறுதி செய்வோம்.

முழுச் சுகாதாரத் திட்டம் முறையான குடும்ப விழிப்புணர்வுடன் திறம்படச் செயல்படுத்துவோம்.

அனைத்து மருத்துவமனைகளிலும் தரமான இலவச சிகிட்சையை அளிப்பதுடன் எஸ்.சி.டி.சி மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

புதுச்சேரியை கொசு இல்லாத மாநிலமாக மாற்றுவோம்.கொசுவால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவோம்.

நவீன சாதனங்கள் மற்றும் வடிகால் பணிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் புதுச்சேரியில் மனிதனால் மலக்குழி சுத்தம் செய்யும் முறை முற்றிலும் அகற்றப்படும்.

புதுச்சேரியின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போதுமான மனநல வார்டுகள் மற்றும் மறுவாழ்வு மையங்களை உறுதி செய்வோம்.

புதுச்சேரியின் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவர்களின் சேவையை உறுதி செய்வோம்.

We will increase more primary health centers along with counsellors and psychiatrists to treat mental health issues in rural areas.

Free Medical Insurance Scheme will be ensured to all economically backward people of Puducherry.

We will ensure that all the Education institution has a mental health counsellors to take care of mental wellbeing of the students.

Effective implementation of total sanitation program will be done with proper household awareness.

We will ensure quality healthcare service to all the people with proper tracking through SCDC.

We will make Puducherry as a mosquito free state and control the diseases caused by mosquito.

We will ensure zero Manual Scavenging in Puducherry by upgrading to modern equipments and safety measures for drainage work.

We will ensure adequate psychiatric wards and rehabilitation centers in all Government hospitals of Puducherry.

We will ensure the availability of ambulance service and doctors in all the Primary Health Centres of Puducherry



# நீர் /
# WATER

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

(குறள் 20)

Water is life that comes from rain
Sans rain our duties go in vain.

( Kural 20 )

பொதுக்குழாய்களில் நீர் வீணாவதைத்தடுத்து, அதை முறைதவறிப் பயன்படுத்தப்படுவது தண்டனைக்கு உட்படுத்தப்படும்.

வெளிப்படையான குறிப்பிட்ட கால இடைவெளியில் குடிநீர் தரம் ஆய்வு செய்யப்பட்டுப் பராமரிக்கப்படும்.

நீர்நிலைகளில் மறுசீரமைப்புத் திட்டங்கள் முறையாகப் பின்பற்றப்படும்.

உள்ளூர் நீர்நிலைப் பயனாளிகள் சங்கங்கள் புத்துயிர் அளிக்கப்பெற்று வளப்படுத்தப்படும்.

ஒட்டுமொத்த மாநில நீர்ப்பாசன மேலாண்மைச் சட்டம் மூலம் நீர்ப் பயனாளிகள் சங்கங்கள் அதிகாரப்படுத்தப்படும்.

மழைநீர் சேகரிப்பு முறை மறுசீரமைப்புச் செய்யப்பட்டு அனைத்துக்கட்டமைப்புகளிலும் கட்டாயமாக்கப்படும்.

நீர்நிலைகள் மற்றும் கால்வாய்கள் மீதான ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

நதி நீர் இணைப்புகளை செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

We ensure the maintenance of public taps from water wastage and misusing the same will be severely penalized.

We will ensure transparent and periodical scrutiny of drinking water quality.

Water bodies rehabilitation programme will be maintained.

Local level tank users associations will be revived and strengthened.

A comprehensive State Irrigation Management Act to empower the User Associations to be passed.

Re- establishment of rain water harvesting will be made compulsory for all the houses, Govt. Offices, Marriage Halls and Educational Institutions.

Encroachments on water bodies and canals will be removed.

Steps will be taken to implement river interlinkage.





# உழவர் மற்றும் மீன்பிடி தொழில் வளர்ச்சி /

# FARMER AND FISHERIES DEVELOPMENT

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

(குறள் 1031)

Farming though hard is foremost trade
Men ply at will but ploughmen lead.

( Kural 1031)

நாங்கள் புதுச்சேரியின் அனைத்து சிறிய /நடுத்தர விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் மூலம் இயற்கைசார் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயத்தை ஊக்குவித்து விவசாயப் பொருட்களுக்கு ஒரு வெளிப்படையான சந்தை தொடர்பு அமைப்போம்.

We promote Organic and Integrated farming through interest free loans to all small / Medium farmers in Puducherry and there will be a transparent market linkage for farmer's products.

நாங்கள் புதுவை மாநில விவசாய நிலங்கள்,கடல்சார் வளங்களைத் தரகர்களிடமிருந்து மீட்டு, பாதுகாக்க வலிமையான சட்டத்தை கொண்டு வருவோம்.

We will enact a strong legislation to protect & preserve farming lands and ocean resources of the state from real estate and exploitation.

அனைத்து ஏரி, ஏரிக்கரைகளையும் மீட்டெடுத்து முறையான செயல்திறனுடன் நீர்ப்பாசன முகமை மற்றும் நீர் வள மேலாண்மை அமைப்போம்.

We will enact a strong legislation to protect & preserve farming lands and ocean resources of the state from real estate and exploitation.

அனைத்து கொம்யூன்/வட்டம்/சமூகங்களுக்கு மலிவு விலையில் பாரம்பரிய விதை வங்கி அமைப்போம்.

Establish traditional seed bank in all the communes/ block/ communities with affordable cost.

நாங்கள் அனைத்து சிறு/நடுத்தர விவசாயிகளுக்கு உழவர் மற்றும் பயிர் காப்பீடு இலவசமாக வழங்குவோம். மேலும் காப்பீடு தொகையைத் துரிதமாக வழங்குவதோடு கடன்களிலிருந்து விடுவிக்கவும் உறுதியளிக்கிறோம்.

We will provide farmers and Crop Insurance to all small / medium farmer for free of cost and speedy recovery and calming of insurance and loans.

விவசாயப் பொருட்களின் விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தில் விவசாய பிரதிநிதிகளும் சேர்க்கப்படுவர்.

Farmers representative will be included in the Price fixing committee for their products.

விவசாய மீனவ தொழிலாளர்களுக்கு நேர அடிப்படையில் குறைந்தப்பட்ச ஊதியச் சட்டம் திறம்பட செயல்படுத்தப்படும்.

Minimum wage act will be effectively implemented for agricultural & fishing labour on hourly basis.

விவசாய மீனவ உற்பத்தி நிறுவனங்கள் அந்தந்தக் கிராமங்களில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களுடன் வேளாண் நிறுவனமாக நிறுவப்படும்.

Farmers & fisherman producers company will be promoted and established as agri-enterprises in their respective villages with value added products.

பருவநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை மற்றும் இயற்கை பேரழிவில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள விவசாயிகளுக்கு விவசாய கடன் தள்ளுபடி செய்யப்படும்.

Waiving off agri loans for lower economic farmer who was suffered a lot because of water scarcity, climatic change and natural disasters.

விவசாயிகளிடமிருந்து பொருட்களை நேரடியாக தரமான கிடங்குகளுடன் சேகரிப்பதற்கான முறையான கொள்முதல் அலகுகளை நாங்கள் உறுதி செய்வோம், அவற்றை எளிதில் அணுகக்கூடிய நியாயமான விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு திறம்பட விநியோகிப்போம்.

We will ensure proper procurement units to collect the goods directly from the farmers with a quality warehouses to store them and will distribute them effectively to the public through easily accessible fair price shops.



குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். (குறள் 549)

Save his subjects and chide the wrong
Is awless duty of a king. ( Kural 549)


**Trust for Youth and Child Leadership(TYCL)**

www.tycl.org.in | admin@tycl.org.in

+91 7339222100 | 0413 2224243 No. 17, Pookara St, Muthialpet, Puducherry - 605 003